

27.07.2026 அன்று கர்நாடக மாநிலம் மைசூரில் நடைபெற்ற 10 வயதிற்குட்பட்டோருக்கான தேசிய அளவிலான கராத்தே போட்டியில் மூன்றாம் இடம் பெற்ற சென்னிமலை மேற்கு ஒன்றியம், மேலப்பாளையத்தைச் சேர்ந்த சிறுவன் பிரபாகரனை கழக துணைப் பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் பாராட்டி வாழ்த்தினார். இதில் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் எஸ்.ஆர். எஸ்.செல்வம் உள்பட கழக நிர்வாகிகள் உள்ளனர்.




நீட் தேர்வை ஒன்றிய அரசு நீக்க வலியுறுத்தி கோவை மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் ஜென்சி தி.மு.க. சார்பில் ஒருங்கிணைப்பாளர் ஆதவன் சதீஷ்குமார் தலைமையில் ரஜினிகாந்த், வழக்கறிஞர் தினேஷ்குமார் முன்னிலையில் இப்ராஹிம், சரவணன், சஞ்சித், ஷரீப், சாபீனா வரவேற்புரையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஒருங்கிணைப்பாளர் ஆதவன் சதீஷ்குமார், தலைமைக் கழக பேச்சாளர் நாக நந்தினி, வழக்கறிஞர் தினேஷ்குமார், பிரவீன் கண்டன உரையாற்றினர். இதில் சலாம், பிரபாகரன், சண்முகம், கார்த்திக், முகமது இஸ்மாயில், நவீன், யாசர் அராபத், மோனிகா, காவியா சந்தோஷ்னா, ஆயிஷா பாத்திமா, பாரதி, அப்துல் ரகுமான், திராவிட வீரன் நஸ்ரின் காயத்ரி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### டாஸ்மாக் அருகே பார் திறக்க அரசாணை! இளைஞர்களை 24 மணி நேரமும்


# மதுவில் குளிக்க வைக்கும் த.வெ.க. அரசின் செயலுக்கு கண்டனம்!

## சட்டப் பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு வலைதளப் பதிவு!

நெல்லை, ஜூலை 30 –

சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு. அப்பாவு தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறி யிருப்பதாவது.

த.வெ.க.தொடங்கிய நாள் முதல் தமிழ்நாட்டில்தான் போதை பொருட்கள் பயன் பாடு அதிகரித்து விட்டதாக விஜய் அவர்கள் ஒப்பாரி வைத் துக் கொண்டே இருந்தார். தனது ஆட்சி அமைந்ததும் 717 டாஸ்மார்க் கடைகளை மூடியதாக நாடக மாடிய விஜய் இப்போது 54 புது ரக மதுபா னங்கள் அறிமுகப்படுத்தி டாஸ் மார்க் கடை அருகே பார் திறக் கவும் அரசாணை வெளியிட்டு தமிழக இளைஞர்கள் 24 மணி நேரமும் மதுவில் குளிக்க வைக்கும் செயலை வன்மை யாக கண்டிக்கிறேன்.



தி.மு.க.ஆட்சியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த "ரேவ் பார்ட்டி திறக்க அனுமதி தந்து General G என்ற whatsapp group ஆரம்பித்து இளம் ஆண்களும், பெண்களும் சேர்ந்து உயர்ரக வெளிநாட்டு போதை பொருள்களை விடிய விடிய (sunset to sanrise ) பயன்படுத்த அனுமதித்திருப் பது பெற்றோர்களையும்,தமிழ் சமூகத்தையும் கலக்கத்தில் ஆழ்த்திருப்பது தெரிய வில் லையா CMsir?

30க்கும் மேற்பட்ட படங்க ளில் குடிகாரனாகவும்,புகை பிடிப்பவ ராகவும், 34 ஆண்டு கள் நீங்கள் நடித்ததை பார்த்த ரசிகர்கள் அந்தப் பழக்கத் திற்கு அடிமையாகி விட்டார்கள் என்பது உங்களுக்கு தெரி யாதா! CMsir? உங்கள் படம் வெளியான திரை யரங்குக ளில் சிதறி கிடந்த போதைப் பொருள் இருந்த கவர்களே அதற்கு சாட்சி.உங்களை சந் தித்த கேரள உள்துறை அமைச்சர் போதைப் பொருட் கள் கேரளாவிற்க்கு கடத்தப்ப டுவதை தடுத்து நிறுத்துங்கள் என்று கூறியது வெட்கமாக இல்லையா! CMsir?

காவல்துறையில் உள்ள SB CID,SB Constable, Q Branch, Special division,PEW,

Narcotics Intelligence Bureau போன்ற பிரிவின ருக்கு தெரியாமல் வெளிநாடு மற்றும் வெளி மாநிலங்களில் இருந்து போதை பொருட்களை தமிழகத் திற்கு கொண்டு வந்து விற் பனை செய்ய முடியாது என்றும் தமிழக சிறைகளில் தங்குதடை யின்றி பயன்படுத்தவும் முடி யாது என்றும்,விவரம் அறிந்த ஓய்வு பெற்ற காவல்துறை அதி காரிகள் ஆதங்கப்படுவது தெரி யுமா! CMsir? இந்த சீரழிவுகள் உங்களுக்குத் தெரிந்து தான் நடக்கிறதா அல்லது தெரிந்தும் தெரியாது போல் நாடகம் ஆட்சி நடத்துகிறீர்களா! CMsir ?

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### பாதசாரிகளுக்கான வசதிகள் – மிதிவண்டிப் பயன்பாட்டை அதிகரிக்கவும்

# சுற்றுச்சூழலை மேம்படுத்தவும் ஒன்றிய அரசால் உரிய முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதா?

## மாநிலங்களவையில் – எஸ்.ஆர்.சிவலிங்கம் கேள்வி!

*புதுடெல்லி, ஜூலை 30-*

*பாதசாரிகளுக்கான வசதிகள் பெருக்கவும், மிதிவண்டி பயன் பாட்டை அதிகரிக்கவும், சுற்றுச் சூழலை மேம்ப டுத்தவும் உரிய முயற்சிக ளில் ஒன்றிய அரசால் எடுக்கப்பட்டுள்ளதா? என்று மாநிலங்களவை யில் திராவிட முன்னேற் றக் கழக மேலவை உறுப் பினர் எஸ்.ஆர். சிவ லிங்கம் கேள்வி எழுப்பி னார்.*



*திராவிடமுன்னேற் றக் கழக, மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் அவர்கள் 27 ஜூலை 2026 அன்று மாநிலங்களவையில் பாதசாரிகளுக்கான வச திகள் பெருக்கவும், மிதி வண்டி பயன்பாட்டை அதிகரிக்கவும், சுற்றுச் சூழலை மேம்படுத்த வும், போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் ஒன்றிய அரசு, ஏதேனும் முயற்சிகளை எடுத்துள்ளதா? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரி விக்க இயலுமா? என் றும், ஒன்றிய அரசின் நகர்புற வளர்ச்சித் துறை இணையமைச்சர் மோகன் சாகு அவர்களி டம் விரிவான கேள் வியை எழுப்பினார்.*

*ஒன்றிய அரசின் நகர் புற வளர்ச்சித துறை இணையமைச்சர் அவர் கள் அளித்த பதில் வரு மாறு:*

*அரசிலமைப்பு சட் டத்தின்படி உள்ளாட்சி சார்ந்த சாலைகள், பாலங்கள் அனைத்தும் மாநில அரசின் பட்டிய லில் இருப்பதால் உள் ளாட்சி அமைப்புகள், நகராட்சிகளே உரிய முயற்சி எடுக்க வேண் டும் என்றும், ஆனால் போக்குவரத்து நெரி சலை தவிர்க்கத் தேவை யான கொள்கை முடிவு கள், விதிகள் ஆகியற்றை ஒன்றிய அரசு அனைத்து மாநில அரசுகளுக்கும் அவ்வப்போது வழங்கி வருகிறது என்றும், தேசிய நகரப் போக்குவ ரத்து கொள்கை, மெட்ரோ தொடர் வண்டி கொள்கை ஆகிய வற்றின்படி பாதசாரிக ளுக்கும், மிதிவண்டி உபயோகப்பவர்களுக் கும் தேவையான வசதி செய்து தர ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்றும், அடல் மிஷன் எனப்படும் அம்ருத் திட் டத்தின்படி 500 நகரங்க ளுக்கான வழிகாட்டி நெறிமுறைகள் ஒன்றிய அரசால் அளிக்கப்பட் டுள்ளது என்றும், இணையமைச்சர் தெரி வித்தார்.*

*மேலும், தேசிய நகர வாழ்வாதார திட்ட த்தின் கீழ் 2958 திட்டங் களின் வழி சுமார் 8 இலட்சம் மரக்கணிகள் நடப்பட்டுள்ளன என் றும், இதன் மூலம் சுற் றுச் சூழல் மேம்பட ஆவன செய்யப்பட்டுள் ளது என்றும், 100க்கும் மேற்பட்ட நகரங்களில் 10000க்கும் அதிகமான மின்சாரப் பேருந்துளை இயக்கி சுற்றுச் சூழல் பாதுகாக்க அனைத்து முயற்சிகளை யும் ஒன் றியு அரசு எடுத்துள்ளது என்றும் ஒன்றியஅரசின் நகர்புற வளர்ச்சித துறை இணைய மைச்சர் அவர் கள் மாநிலங்களவையில் தி.மு.க. மேலவை உறுப் பினர் எஸ்.ஆர். சிவலிங் கம் எழுப்பிய கேள் விக்கு ஒன்றிய அமைச்சர் விரிவான பதிலை அளித் துள்ளார்.*

### 'மாற்று அரசியல் வேண்டும்' என வாக்களித்த மக்கள்

# த.வெ.க. ஆட்சியில் விழிபிதுங்கி தவிக்கும் நிலை!


## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, ஜூலை 29–

எல்லாம் தெரிந்தவர் போல காட்டிக்கொண்ட முதல்வர் ஜோசப் விஜய்க்கு வாக்களித்த மக்கள் நிர் வாக திறமையின்மையால் த.வெ.க. ஆட்சியில் விழி பிதுங்கி தவிக்கிறார்கள் என "தினகரன்" நாளேடு தலை யங்கத்தில் விமர் சித்துள்ளது.

அது வருமாறு:–

தமிழ்நாட்டில் திமுக கூட்டணி கட்சிகளுடன் ஆட்சி அமைத்த தவெக அரசு, 81 நாட்களை கடந் தும் மக்கள் நல பிரச்சினை கள், பெண்கள் பாதுகாப்பு, வெளிமாநி லங்களுக்கு செல்லும் புதிய தொழிற்சாலைகள், காவிரியில் தண்ணீர் திறக்க சட்ட போராட்டம் எடுக்காததால் விவசாயி களின் வாழ்வாதாரம் வெகுவாக பாதிப்பு, அனைத்து துறைகளின் செயல்பா டுகளும் முடங்கி இருப்பது என்பது உள்பட பல்வேறு பிரச்சினை களில் தெளி வான நடவடிக்கை எடுக்காததால் வெகுஜன மக் கள் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளனர்.



தினகரன்

ஜூலை 28, 2026 செவ்வாய்க்கிழமை

தவிக்கும் மக்கள்

தமிழ்நாட்டில் வழக்கமாக புதிய அரசு அமைந்ததும் ஆட்சியின் செயல்பாடுகள் அனைத்து துறைக ளிலும் பிரதிபலிக்கும். மேலும் மக் கள் நல பிரச்சினைகளில் கூடுதல் கவனம் செலுத்தப்படும். மக்களின் சேவைகளுக்காக ஒவ்வொரு துறையும் மாற்றி அமைக்கப்படும். கடந்த 2021ம் ஆண்டு திமுக ஆட்சி அமைந்ததும் மகளிர் இல வச பேருந்து பயணம், புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், மக்களைத் தேடி மருத்து வம், காலை உணவுத் திட்டம் மற் றும் மகளிர் நலம். கல்வி மற்றும் மருத்துவம் ஆகிய துறைகளில் பல முக்கிய திட்டங்கள் நிறைவேற் றப் பட்டது. ஆனால் தற்போதைய தவெக அரசு, திமுக அரசின் திட் டங்களுக்கு பெயர் மாற்றம் செய்து ஸ்டிக்கர் ஒட்டும் வேலையை தான் செய்து வருகிறது.


இந்த புதிய அரசு அமைந்ததும் 200 யூனிட் வரை மின்சாரம் இலவ சம் என அறிவிப்பு வெளியானது. அதற்கான பலன்கள் மக்களுக்கு சென்றடைந்ததா? என்பதற்கு பதில் மின் கட்ட ணம் உயர்ந்துள்ள தாக மின் நுகர்வோர்கள் சமூக வலைதளங்களில் குற்றம் சாட்டு கின்றனர். காவிரி நீரை கர்நாடகம் திறக்காததால் டெல்டா முழுவதும் பாலைவனமாக மாறி வருகிறது. விளையும் பயிர் முளையிலேயே தெரியும் என்ற பழமொழிக்கு ஏற்ப ஆட்சி அமைந்து 3 மாதங்கள் நிறைவடையும் நிலையில் மக்கள், விவசாயிக ளின் மனதில் மகிழ்ச்சி தெரியவில்லை.

காவிரி நீர் விவகாரம் குறித்து தமிழக முதல்வர் விஜய், கர்நாடகா சென்று அம்மாநில முதல்வரிடம் பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாக வேளாண்மைத்துறை அமைச்சர் வினோத் கூறி னார். மறுநாளே இதற்கு மறுப்பு தெரிவித்து கூறுகி றார் பள்ளி கல்வித்துறை அமைச் சர் ராஜ் மோகன். உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலை மீறி பேச்சு வார்த்தை நடத்துவதை தவிர்க்க வேண்டும். உடனே சட்டப் போராட் டத்தை நடத்தி காவிரி நீரை பெற் றுத்தர வேண்டும் என விவசாய சங்கங்கள், திமுக உள்ளிட்ட எதிர்க் கட்சிகள் வலியுறுத்தி வரு கின் றன. ஆனால் அரசு சார்பில் இது வரை எந்த விளக்கமும் வெளியிடவில்லை.

கடந்த கால தி.மு.க. ஆட்சியை குறை கூறி வந்தால் தப்பித்து விட லாம் என அரசு மனக்கணக்கு போடுகிறது. காவிரி நீர் உள்ளிட்ட பல்வேறு விவரங்களை தீர்க்க அர சியல் நிபுணர்க ளிடம் ஆலோ சனை நடத்துங்கள். ஆனால் அதற்கு வாய்ப்பில்லை. ஏன் என் றால் நீங்கள் அனைத்தும் தெரிந்த வர் என நினைப்பில் இருந்து வரு கிறீர்கள். மாற்று அரசியல் வேண்டும் என வாக்களித்த மக் கள் தான் தற்போது விழிபிதுங்கி தவிக்கின்றனர்.

அரசு வழக்கறிஞர்கள் நியம னத்துக்கு லஞ்சம், மாநிலத்தில் குற்றச் செயல்கள் மற்றும் கொலைகள் அதிகரித்துள்ளது. லாக்அப் மரணங் கள், அரசின் நிதி மேலாண்மை மற்றும் நிர்வாக செயல்பாடுகள் மீது அதிருப்தி, தேர்தல் வாக்குறுதிகள் நிறை வேற்றாதது, பொதுமக்களுக்கு பாதுகாப்பின்மை, காவல்துறை சுதந்திரமாக செயல்படவில்லை மற் றும் அனைத்து துறைகளும் செயலிழந்து விட்டது. விரைவில் மக்கள் பிரச்சினை கள் மற்றும் விவசா யிகள் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் என்பதே அனை வரின் விருப்பமாக உள்ளது.

இவ்வாறு 'தினகரன்' தலை யங் கத்தில் கூறப்பட்டுள்ளது.



சேலம் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் விவசாய சங்கம் சார்பில், தமிழக முதல்வர் தேர்தல் வாக்குறுதியில் அளித்த வாக்குறுதிபடி, கூட்டுறவு வங்கியில் விவசாயிகள் பெற்ற பயிர் கடனை தள்ளுபடி செய்யக் கோரி, கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்க கிழக்கு மாவட்ட செயலாளர் க.சி. அருள்மணி வரவேற்புரையாற்றினார். தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்க நிறுவனத் தலைவர் வழக்கறிஞர் ஈசன் முருகசாமி கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு பயிர் கடனை தள்ளுபடி செய்யக் கோரி முழக்கங்களை எழுப்பினர். இதில் அன்பரசு, செல்வராஜ், மோகன்ராஜ், செந்தில்குமார் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். ஆர்ப்பாட்டம் முடிவில் இயற்கை விவசாயி இரா. சுந்தர்ராஜன் நன்றியுரை யாற்றினார். இதனை தொடர்ந்து மஞ்சினி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க செயலாளர் அழகனிடம் கோரிக்கை மனுவை வழங்கினர்.

### சோளிங்கர் – த.வெ.க எம்.எல்.ஏ. தலைமையில் 20 பேர் கொண்ட கும்பல்

# பத்திரிகையாளர்களை அறையில் அடைத்து வைத்து கொலைவெறித் தாக்குதல்!

## நடவடிக்கை எடுக்கக் கோரி உறவினர்கள் – பொதுமக்கள் சாலை மறியல்!

*வேலூர், ஜூலை 30 -*

*இராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கரில் தினகரன், தினமலர் நிருபர் களை அறையில் அடைத்து வைத்து கொலைவெறி தாக்குதல் நடத்திய சோளிங்கர் எம்.எல்.ஏ. தலைமையில் 20க்கும் மேற் பட்ட கும்பல் மீது நடவ டிக்கை எடுக்க கோரி உறவி னர்கள், பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டதால் பெரும் பர பரப்பு ஏற்பட்டது. இரா ணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கரில் ஒரு தியேட் டரில் சில நாட்களுக்கு முன்பு ஜனநாயகன் திரைப் படம் வெளியானது. இந்த திரைப்படத்தை சோளிங் கர் எம்எல்ஏ கபில் தியேட் டரில் பார்த்துவிட்டு வெளியே வந்துள்ளார். அப்போது யூடியூபர் சிவா என்பவர் அங்கே இருந் துள்ளார். உடனே த. வெ.க. எம்.எல்.ஏ. கபில் அந்த யூ.டியூபரை தாக்க முயன்றுள்ளார் அது தொடர்பான வீடியோ சமூக வலைத் தளங்களில் வைரலானது. மேலும் இது குறித்த செய்தி டி.வி.களில் ஒளிபரப்பானது.*

*இதனால் எம்.எல்.ஏ. கபில் மற்றும் அவரது ஆதர வாளர்கள் ஆத்திரம டைந்து அந்த யூ டியூபர் சிவாவை தேடி வந்துள்ள னர். தொடர்ந்து படத்தை தியேட்டருக்கு சென்று சி.சி.டி.வி. கேமரா பதிவு களை ஆய்வு செய்துள்ள னர். அப்போது நிருபர்கள் யூடியூபர் மற்றும் யார் யார் வந்தார்கள் என்பது குறித்து ஆய்வு செய்துள்ளார்.*

*இந்நிலையில் சோளிங் கர் அண்ணா சிலை அருகே உள்ள யூ டியூபரின் வீட் டிற்கு எம்.எல்.ஏ. கபில் மற் றும் அவரது தம்பி தனஞ் செழியன் மற்றும் 20க்கும் மேற்பட்டவர்கள் அங்கு சென்றுள்ளனர். அப்போது அவர் குளித்து கொண்டு இருந்துள்ளார் குளித்து முடித்தவுடன் வெளியே வந்த சிவாவை வலுக்கட் டாயமாக அருகில் உள்ள யூடியூபரின் ஸ்டுடியோ கடைக்கு அழைத்துச் சென்று சரமாரியாக தாக்கி உள்ளனர்.*

*இதற்கு இடையே சம்ப வம் குறித்து அறிந்த அப்ப குதி பொதுமக்கள் கடை யின் வெளியே குவிந்தனர். கடையின் வெளியே நடந்த சம்பவங்களை நிரு பர்கள் ரங்கநாதன், கல்யா ணசுந்தரம் ஆகியோர் செல்போனில் வீடியோ பதிவு செய்து கொண்டிருந் தனர்.*

*இதைப் பார்த்த கபில், அவர் தம்பி தனஞ்செழி யன் மற்றும் 20க்கும் மேற் பட்ட ஆதரவாளர்கள் ஆவேசத்துடன் அரங்கநா தன் மற்றும் கல்யாணசுந்த ரம் இருவரையும் சுற்றி வளைத்து பிடித்து அந்த கடையில் உள்ளே தள்ளி கதவை மூடி உள்ளே வைத்து சரமாரியாக தாக்கி உள்ளனர். மேலும் செல் போன்களை பறித்துக் கொண்டு பதிவு செய்த வீடியோக்களை அழிக்கு மாறு கூறியுள்ளனர்.*

*இவர்களின் சத்தம் கேட்டதும் அங்கிருந்த பொதுமக்கள் கடையின் முன்பு குவிந்து கூச்ச லிட்ட னர். தகவல் அறிந்த சோளிங்கர், போலீசார் சம் பவ இடத்திற்கு வந்தனர் காவல் அதி காரி எம்.எல்.ஏ. கபில் போன் செய்து வரவ ழைத்தார். அப்போது நிரு பர்கள் அரங்கநாதன் தினம லர் நிருபர் கல்யாணசுந்த ரம் ஆகியோர் பதிவு செய்த வீடியோக்களை எஸ்.ஐ. முன்னி லையில் எம்.எல்.ஏ. கபில் அவரது தம்பி தனஞ் செழியன் ஆகியோர் அழித் துள்ளனர். தொடர்ந்து அவர்களை த.வெ.க.வின் எம்.எல்.ஏ. மற்றும் அக்கட் சியினர் அந்த நிருபர்களை கடுமை யாக தாக்கிவிட்டு காரில் தப்பி சென்றனர். தாக்குதலில் பலத்த காய டைந்த அரங்கநாதன், கல் யாணசுந்தரம், சிவா ஆகிய மூன்று பேரையும் அங்கி ருந்த பொதுமக்கள் மீட்டு சோளிங்கர் அரசு மருத்துவ மனையில் சேர்த்துள்ளனர். அங்கு அவர்களுக்கு முதல் உதவி சிகிச்சை அளிக்கப் பட்டு மேல்சிகிச்சைக்குவே லூர்தனியார் மருத்துவம னைக்கு அழைத்துச் சென்றனர்.*

*இதற்கு இடையில் இந்த தாக்குதல் சம்பவத்தைநே ரில் பார்த்து அதிர்ச்சி அடைந்த உறவினர்கள் மற் றும் பொதுமக்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது தாக்கு நடத்திவிட்டு தப்பி ஓடிய எம்.எல்.ஏ. மற்றும் அவரது ஆதரவாளர்கள் மீது நடவடிக்கை எடுத்து கைது செய்ய வேண்டும் என்று கூறி போலீசாரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்ட னர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட் டது. மேலும் தாக்குதலில் காயம்அடைந்த இந்த மூன்று பேரும் சோளிங்கர் போலீசில் தனித்தனியாக புகார் மனு அளித்துள் ளனர்.*



ஆழியார் புதிய ஆயக்கட்டு விவசாயிகள் நல சங்கத்தின் நிர்வாகிகள் மற்றும் திட்டக்குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஆனைமலையாறு நல்லாறு திட்டம் தொடர்பாக ஆய்வை மேற்கொண்ட வால்பாறை சட்டமன்ற உறுப்பினர், நகரக் கழக செயலாளர் குட்டி (எ)ஆ.சுதாகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து ஆழியார் பாசன கால்வாய்களில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்த கோரிக்கை மனுவை வழங்கினர்.